**In the Court of the Subordinate Judge, Srivaikundam.**

Case.No.MCOP.4/2025

Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | மருத்துவர் திரு. சுப்பிரமணியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 31st day of July 2026

**முதல்விசாரணை :-**

நான் தூத்துக்குடி ஜெயந்நல்லதம்பி மருத்துவமனையில் சிறுநீரக பிரிவு சிறப்பு மருத்துவராகவும், மருத்துவ ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறேன். காமராஜ் என்பவருக்கு எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கியது சம்மந்தமாக அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்து உரிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்கும்படி அழைப்பாணை கிடைக்கப்பெற்றது. மேற்படி காமராஜ், வயது 65 என்பவர் 13.12.2019ம் தேதியில் சிறுநீரக செயல் இழப்பு சிகிச்சைக்காக வந்தார். சிகிச்சைக்கு வந்தபோது அவருக்கு மூச்சு திணறல் இருந்தது. அவரை பரிசோதித்த போது அவருக்கு சிறுநீரக செயல் இழப்பு காரணமாக உடம்பில் நீர்கோர்த்து, நுரையீரலிலும் நீர்கோர்த்து இருந்தது. அவரை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து டையலாலிஸ் சிகிச்சை வழங்கினோம். அவரிடம் கடந்த கால உடல் நிலை குறித்து விசாரித்தபோது சிகிச்சை வந்த தேதியிலிருந்து 6 வருடத்திற்கு முன்பு இருந்தே சர்க்கரை நோய், ரத்த கொதிப்பு உள்ளதாக சொன்னார். 6 மாதத்திற்கு முன்பு சாலை விபத்தில் காயம் பட்டதாகவும் சொன்னார். சிகிச்சை வந்த தேதியிலிருந்து 3 மாதத்திற்கு முன்புஇருந்து சிறுநீரக கோளாறு இருந்ததாகவும், உப்பு சத்து குறைபாடு சம்மந்தாகவும் சிகிச்சை எடுத்தாகவும் சொன்னார். ஒருமாதம் என சொல்லி பின்பு 3 மாதம் என சொன்னதால் அடித்து திருத்தினேன். அவருக்கு உள்நோயாளியாக சிகிச்சை வழங்கப்பட்டது. 2 யூனிட்

ரத்தம் ஏற்றப்பட்டது. 3 முறை டையாலிஸ் செய்யப்பட்டது. மேற்படி சிகிச்சையில் அவர் முழுமையாக குணமடைந்து அவருக்கு இருந்த குறைபாடுகள் சரி செய்யப்பட்டுவிட்டன. அதன்பிறகு காலம்வரையறை வாரம் இரண்டுமுறை டையாலிஸ் சிகிச்சைக்காக வீட்டிலிருந்து நேரடியாக மருத்துவமனைக்கு வரும்அளவிற்கு தேறிவிட்டது. அதன்பிறகு அவர் சிகிச்சை வந்ததாக ஆவணங்கள் இல்லை. முழுமையான மருத்துவகோப்பின் நகலை உண்மைநகலாக தாக்கல் செய்கிறேன். **அது சா.சா.ஆ.1 ஆகும்.**

<u>**குறுக்குவிசாரணை**</u>

என்னிடம் காண்பிக்கப்படும் தூத்துக்குடி அரசு மருத்துவமனை வழங்கிய மேற்படி காமராஜ் என்பவரது டீஸ்சார்ஜ் சம்மரியில் 24.09.2019ம் தேதியில் அவர் சாலை விபத்தில் அடிப்பட்டு காயத்திற்கு சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அங்கு அவருக்கு இடது கை மணிக்கட்டில் எலும்பு முறிவு காயத்திற்கு அறுவைசிகிச்சை செய்து கே.ஒயர் பொறுத்தப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அவருக்கான கடந்தகால உடல்நல குறைபாடு குறித்து மருத்துவரிடம் அவர் சொன்ன விபரங்களில் ஒரு வருடத்திற்கு வலது தொடையில் எலும்பு முறிவு காயம் ஏற்பட்டதாகவும், கடந்த 5 ஆண்டுகாலமாக சர்க்கரை நோயும், ரத்தகொதிப்பு உள்ளதாகவும் குறிபிட்டு சொல்லியுள்ளார். அங்கு சிகிச்சை முடித்து 18.10.2019ம் அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். சாட்சி ஆவணங்களை பார்வையிட்டு சொல்கிறார். காமராஜ் என்பவர் விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக என்னிடம் சிகிச்சைக்கு வரவில்லை, சிறுநீரக குறைபாடு சிகிச்சைக்காக மட்டுமே வந்தார். விபத்து நடந்து 3 மாதம் கழித்து சிகிச்சைக்கு வந்தார். என்னிடம் சிகிச்சை வந்த நபர் தொடர்ந்து டையலாலிஸ் செய்ய தவறி இருப்பாரேயானால் அதனால் பக்கவிளைவு ஏற்பட்டு அதன்காரணமாக அதிகப்பட்சமாக ஒரு ஆண்டுகளில் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்.**